பத்திரிக்கை செய்தி

காலி இடத்திற்கு அணுகுசாலை சான்று வழங்க ரூ.60,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் கைது

புகார்தாரர் திரு.வெங்கடேசன், ஓல்டு டெம்பில் லேண்ட் அட்கோ, ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மனைவி பெயரில் உள்ள காலி இடத்திற்கு அணுகுசாலை சான்றுக்காக சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.கார்த்திக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர், மற்றும் திரு.ராஜேந்திரன், மருதண்டபள்ளி பஞ்சாயத்து செயலாளர் ஆகியோர் தங்களுக்கு ரூ.60,000/- லஞ்சமாக தரவேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 24.12.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கார்த்திக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திரு.ராஜேந்திரன், மருதண்டபள்ளி பஞ்சாயத்து செயலாளர் லஞ்ச பணம் ரூ.60,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.